# இருளும் ஒளியும்



தாயின் கருவறையில்
இருக்கும் போது
நாம் கண்டது இருட்டு
காலையில் தாமரை
பூப்பதற்கும்
புதிய புதிய கிளைகள்
உருவாவதற்கும்
காரணம் சூரிய ஒளி.
நாம் இருட்டில்
இருக்கும் போது
பயம் வந்தால்....
ஒளியை தேடுகிறோம்.
ஆனால் நாம் பிறக்கும்
போதும்
இறக்கும் போதும்.
நம் கூடே இருந்தது.
இருட்டு.
நாம் உறங்கும் போது
கண்களை மூடி
நித்திரை தாலாட்டுவதும்
இருட்டு.

இ.

நாம் பிறந்த
உடன் தாயின்
முகத்தை பார்ப்பதற்கும்
நாம் வாழும் உலகத்தை
பார்ப்பதற்கு
உதவியது ஒளி.
நாம் குழந்தையில்
இருக்கும் போது
வண்ண வண்ணமாய்
இருக்கும் ஒளியை
காட்டி சாந்தப்படுத்தினார்
அம்மா.
நம்மை தோளில்
தூக்கி வைத்து
திருவிழாக்களில்
இருக்கும் ஒளியை
காட்டினார் அப்பா.
இருள் சூழ்ந்தால்
ஒளி வராதென்றும்
ஒளி வந்தால்
இருள் வராதென்றும்
நமக்குத் தெரியும்.

வண்ண வண்ண

மின்விலக்குகள்

எல்லாம்

சூரிய ஒளியில்

வைத்தால் எரியாது

அந்த ஒளிவிலக்கு

எரிவதற்கு

இருட்டு என்பது

வேண்டும்.

வெளிச்சம் தருவது

சூரியன்.

இருட்டின் சொந்தக்காரன்

நிலா.

சுட்டெரிப்பதும் சூரியன்.

குளிரில் வாட்டி எடுப்பது

நிலா.

கடலில் இருந்து

பார்ப்பது

சூரியன்.

கருமேகங்களில்
இடையில் இருந்து
சின்ன சிரிப்பு
தந்து வெளிவருகிறது
நிலா.
நாம் கண்ட இயற்கை
காட்சிகளை காண
உதவியது ~~ஒளி~~ ஒளி.
நாம் தவக்கும்
போதும்
தத்தித் தத்தித்
நடக்கும் போதும்
தாவி ஓடும் போதும்
நம் உடன் வந்தது
ஒளி.
நாம் முதலில் புத்தகத்தை
தூக்கும் போதும்
~~ஆ~~ அ ஆ இ ஈ.
என எழுதும்
போதும்

ஒளி தந்தது
சூரியன்

இருள் நேரத்தில்
வெண்மையின்
ஆடை உடுத்தி
பௌர்ணமியின்
உருவன் வைத்து
குழந்தைகளுக்கெல்லாம்.
நிலா சோறூட்டும்
அழகு ஊட்டியது தான்
நிலா.
கவிதை எழுதுவது
என் பணியில்லை
ஆனாலும் உன்னை
தமிழில் நான்
செதுக்கினேன்.